20 copy

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம் -06 | சைவநெறி | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1) ஓம் என்னும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர்?
1. விநாயகர் 2. முருகன் 3. சிவன் 4. திருமால்

2) சைவ இல்லங்களில் தெய்வ வணக்கத்துக்கென்று ஒதுக்கப்பட்ட அறை.
1. களஞ்சிய அறை 2. படுக்கையறை 3. சுவாமிஅறை 4. சமையலறை

3) "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர்.
1. திருமூலர் 2. ஔவையார் 3. திருவள்ளுவர் 4. பாரதியார்

4) "வெற்றிவேற்கை" என்ற நூலின் ஆசிரியர்.
1. அதிவீரராம பாண்டியன் 2. ஔவையார்
3. உலகநாதன் 4. கம்பர்

5) "உண்மை பேசுவோம்" என்ற கதை இடம்பெற்ற நூல்.
1. முதலாம் பால பாடம் 2. இரண்டாம் பால பாடம்
3. சைவ போதம் 4. பஞ்ச தந்திரம்

6) திருநீற்றை மூன்று குறியாகத் தரித்தல்
1. உத்தூளனம் 2. திரியாங்கம் 3. திரிபுண்டரம் 4. பஞ்சாங்கம்

7) "இடரினுந்தளரினும்" என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்.
1. திருவாலவாய் 2. திருவாவடுதுறை 3. திருமருகல் 4. திருவாரூர்

8) தேவர்களைத் தன்முன் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போடச் செய்தவர்.
1. விநாயகர் 2. கஜமுகாசுரன் 3. தாரகாசுரன் 4. சிங்கமுகாசுரன்

9) சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்.
1. வைணவம் 2. சைவம் 3. சாக்தம் 4. கௌமாரம்

10) தந்தையார் செய்ய இருந்த யாகக்கிரியைக்காக இறைவனிடம் பொன்வேண்டி சம்பந்தரால் பாடப்பட்ட தேவாரம்.
1. இடரினும் தளரினும் 2. அவ்வினைக்கிவ்வினை
3. மந்திரமாவது நீறு 4. மடையில் வாளை

11) விநாயகரை அர்ச்சிக்க மிகவும் உகந்தது.
1. வில்வம் 2. துளசி 3. அறுகம்புல் 4. மல்லிகை

12) நாம் பெரியோர் முன் செய்யத்தகாதது.
1. இன்சொல் கூறல் 2. கால் நீட்டிக் கொண்டிருத்தல்.
3. பணிவாக இருத்தல் 4. உண்மை கூறல்

13) நன்றி மறவாமை பற்றிய கதையைக் கூறியவர்.
1. வியாசர் 2. நாவலர் 3. சூதமுனிவர் 4. அகத்தியர்

14) தேவர்களின் அரசன்
1. பிரமா 2. தேவேந்திரன் 3. வருணன் 4. பிரகஸ்பதி

15) வித்தியாரம்பம் எனப்படுவது,
1. சோறூட்டல் 2. நாமகரணம் 3. ஏடுதொடக்குதல் 4. காதுகுத்துதல்

16) எல்லா மதங்களும் ஒற்றுமையுடன் கூறும் விடயம்.
1. ஒழுக்கமாக வாழ்தல் 2. தர்மம் செய்தல்.
3. பிற சமயங்களை மதித்தல் 4. பிற சமயங்களை மதிக்கக்கூடாது.

17) "உண்மை பேசுவோம்" என்ற கதையில் பொய் கூறியவர்.
1. கிருஷ்ணர் 2. முருகன் 3. பாலன் 4. மாதவன்

18) உணவு உண்ணத் தொடங்குமுன் பாடவேண்டிய தேவாரம்.
1. மண்ணில் நல்ல வண்ணம் 2. பெருகலாம் தவம்
3. அன்னம் பாலிக்கும் 4. மாசில் வீணையும்

19) சிவசின்னங்கள்
1. சந்தனம், குங்குமம் 2. விபூதி, உருத்திராக்கம்.
3. பன்னீர், சந்தனம் 4. குங்குமம், பன்னீர்

20) நாம் உலகில் சிறப்பாக வாழக் கடைப்பிடிக்க வேண்டியது.
1. பிறரை அவமதித்தல் 2. ஆடம்பரமாக வாழல்
3. விழுமியங்கள் 4. நம்பெருமை பேசல்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

1) பின்வரும் தேவாரப் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர் பெயர், பாடப்பட்ட தலம் என்பவற்றையும் தருக.
   1. "இடரினுந்தளரினும் ........."
   2. "ஓசை ஒலியெலாம் ......."
   3. "பூசுவதும் வெண்ணீறு ......."
   4. "பித்தாப்பிறை சூடி ......."

(6 + 1 + 1 = 8 x 2 = 16 புள்ளிகள்)

2) "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்"
   1. மேற்குறிப்பிட்ட பாடலடி காணப்படும் நூல் எது?
   2. விநாயகரின் மறுபெயர்கள் 3 தருக?
   3. விநாயகரை வழிபடும் இடங்கள் 3 தருக?
   4. குட்டிக் கும்பிடுதலுடன் தொடர்புடைய கதையைச் சுருக்கமாக எழுதுக.

(2+3+3+3 = 11 புள்ளிகள்)

3) "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
   1. உமது கண்கண்ட தெய்வங்கள் யார்?
   2. ஒரு சைவ இல்லத்தில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சைவப்பழக்க வழக்கங்கள் 3 தருக?
   3. விளக்கேற்றப் பயன்படும் எண்ணெய் வகைகள் எவை?
   4. விசேட தினங்களில் செய்ய வேண்டிய சமயச் செயற்பாடுகள் எவை?

(2+3+3+3 = 11 புள்ளிகள்)

4) "ஒழுக்கம் விழுப்பம் தரும்"
   1. விழுமியம் என்றால் என்ன?
   2. நாம் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியங்கள் 3 தருக?
   3. பெரியோர் முன் செய்யத்தகாத செயல்கள் 3 தருக?
   4. உண்மை பேசியதால் முருகனுக்குக் கிடைத்த நன்மைகள் 2 தருக?

(2+3+3+3 = 11 புள்ளிகள்)

5) "மனித வாழ்வு அர்த்தத்துடனும், நெறிமுறை தவறாதும் அமைய வேண்டும்."
   1. வாழ்வியற் சடங்கு என்றால் என்ன?
   2. வாழ்வியற் சடங்குகள் எவை?
   3. காது குத்தல் சடங்கு இடம் பெறுவதன் காரணம் யாது?
   4. குரு எவ்வாறு ஏடு தொடக்குவார்?

(2+3+3+3 = 11 புள்ளிகள்)